

# ஏய் ரொபின் குருவி !

**பொன் குலேந்திரன் (கனடா)**

நான் ஒரு இயற்கை விரும்பி. இயற்கையில் புதைந்து உள்ள அறிவியல் தத்துவங்களை அலசி ஆராய்பவன்

என் வீட்டுத் தோட்டத்தில் செரி . அப்பில், ப்லம், பல வித பெர்ரி செடிகள் உண்டு . அதோடு மலர் மரக்கரி செடிகளும் உண்டு. குருவிகள் தானியம் உண்ண ஒரு தானியக் கூடு உண்டு. குளிக்கச் சிறு தண்ணீர் தடாகம் உண்டு . முயல்களும் அணில்களும் குருவிகளும் என் வீட்டுத் தோட்டத்துக்கு வந்து போகும். என் வீட்டுத் தோட்டத்கில உள்ள கதிரையில் இருந்து அவைகளின் வருகையைப் பார்த்து ரசிப்பேன் . என் வீடு கனடாவில் உள்ள ஒன்டாரியோ மாகாணத்தில் இருப்பதால் குயில், காகம், கிளி போன்ற வெப்பப் பிரதேசத்தில் வாழும் பறவைகளை என் தோட்டத்தில் காண முடியாது முக்கியமாக என் வீட்டுத் தோட்டத்துக்கு அடிக்கடி வருவது அழகிய ரொபின் குருவிகள்.

அதன் குரல்களைப் பதிவு செய்து அது மனிதனுக்கு எதைச் சொல்ல வருகிறது என்பதை ஆராய்ச்சி செய்பவன் நான்.

அவை எழுப்பும் குரல்களில் பல விதமான அதிர்வுகள் உண்டு. மனிதன் பேசும் குரலில் வித்தியாசம், காரணத் தொடர்பு உள்ளது போல், ரொபின் குருவி எழுப்பும் வித்தியாசமான ஒவ்வொரு குரலின் அதிர்வுக்கும் ஒரு காரணம் உண்டு என்பதை அறிந்தேன் . ரொபின் குருவி தனது காதலியோடு கொஞ்ச அழைக்கும் குரலின் அதிர்வுக்கும் தன்னை இரையாக்கத் தேடிவரும் பூனையைக் கண்டு எழுப்பும் குரலின் அதிர்வுக்கும் வித்தியாசம் உண்டு. உணவையோ கண்டவுடன் மகிழ்ச்சியில் அதை தன் இனத்தவர்களோடு பகிர்ந்து உண்ண அது அழைக்கும் குரலில் வித்தியாசம் உண்டு. தனது ஆட்சிக்குள் இருக்கும் பகுதிக்குத் தனது உத்தரவு இன்றி வேறு இனப் பறவைகள் வந்தால் அதைத் தான் விரும்பவில்லை என்று குரல் எழுப்பி தன் ஆதங்கத்தை வித்தியாசமான குரலில் சில ரொபின் குருவிகள் வெளிக் காட்டும். சில ரொபின் குருவிகள் மகிழ்ச்சியில் பாடும் குரலில் ஒரு சந்தம் உண்டு. அதைக் கேட்டு பதிலுக்கு மற்றைய ரொபின் குருவிகளும் பாடத் தொடங்கும்

அவை சில நேரம் மரக் கொப்பில் இருந்தபடியே தன் தலையையும் உடலையும் அசைத்து நடனமும் ஆடும்.

என் தோட்டத்துக்கு அடிக்கடி வரும் ரொபின் குருவியிடம் நான் கேட்க விரும்பும் சில கேள்விகளை அதன் குரலின் அதிர்வில் பதிவு செய்து அதன் மூலம் கேட்டேன். அந்த கேள்விகளுக்கு தன் குரலில் அக் குருவி கொடுத்த பதில்கள் இவை

நான்: “ஏய் ரொபின் குருவி, என் பெயர் ராபர்ட்

. என்னை ரொபின் என்று சுருக்கமாக என் நண்பர்கள் கூப்பிடுவார்கள் . தினமும் என் தோட்டத்துக்கு வருகிறாயே. உன் பெயரும் என் பெயர் போல் ரொபின் என்று பலர் சொல்லி அறிந்தேன் . உனக்கு ரொபின் என்று பெயர் எப்படி வந்தது “?

குருவி : “ நல்ல கேள்வி இது . நீ ஒருவன் தான் இந்த கேள்வியை என்னிடம் கேட்கிறாய். முதலில் நான் பதில் சொல்ல முன் உன்னிடம் ஒரு கேள்வி. நீ பிறந்த தேசம் எது”?

நான் : ” நான் பிறந்தது இங்கிலாந்து. புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்கிறேன் ” .

குருவி : “அப்படிச் சொல் ராபர்ட் இங்கிலாந்தில் ரொபின் என்று என்னை அழைப்பார்கள். இங்கே வட அமெரிக்காவில் “அமெரிக்க ரொபின் “ என்று பெயர் வைத்து அழைப்பர். அமெரிக்க ராபின் (டர்டஸ் மிகாரோட்டியஸ்) என அறியப்படுகிறது. இந்த விஞ்ஞான பெயர் வெறுமனே புலம்பெயர் புண்ணியம் என்று பொருள். இங்கிலாந்தில் ,பதினைந்தாம் நூற்றாண்டில், உயிரினங்களுக்கு மனித பெயர்களை வைப்பது பிரபலமாக இருந்தபோது எனக்கு அந்த பெயரைச் சூட்டினார்கள். என் பிற, பழைய ஆங்கில பெயர்கள் ரூடோக் மற்றும் ராபினெட் ஆகியவையாகும் சிவப்பு / ஆரஞ்சு நிறமுள்ள என் மார்பகத்தின் அடிப்படையில் நான் அந்தப் பெயரைப் பெறுகிறேன். இன்னும் ஒன்றையும் உனக்கு சொல்ல விரும்புகிறேன். அதிர்ச்சி அடைந்து

விடாதே. என்னைப் புனிதம் உள்ள தெய்வீக பறவை என்பர். நான் ஒரு வசந்தகால பறவை என்பதால் மறுபிறப்பு அல்லது புதுப்பித்தல் பறவை என்பதை என் பெயர் குறிக்கிறது".

நான் : "அதுசரி நீ ஆணா பெண்ணா "?

குருவி : "ஆண் ரொபின் குருவி பெண் குருவியை விடப் பிரகாசமான நிறம் உள்ளது. அதன் கண் வளையம், பிரகாசமான கூழ் வண்ணம், கருப்பு தலை மற்றும் வெள்ளை நிறத் தொண்டை ஆகியவை ஆண் பறவையின் தோற்றம்".

நான்: " அப்போ உன் தொற்றத்தைப் பார்த்தால் நீ ஆண் குருவி தான் . அதுசரி எங்கே உன் சோடி?

குருவி: "அவளுக்குப் பொறுப்பு அதிகம். முட்டையிட்டு அடைகாத்து, குஞ்சு பொரித்து, குஞ்சுகள் வளரும் மட்டும் குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட வேண்டும் அப்பத் தான் எங்கள் பரம்பரை விரிவடையும் ".

நான் : "நீங்கள் இடும் முட்டை இலங்கையில்

உள்ள காக்கா முட்டை போல் அழகான நீல நிற முட்டை . அதுசரி உங்கள் ஆயுள் காலம் எவ்வளவு"?

குருவி : "இரண்டு கிழமைகளில் பொரித்து குஞ்சுகள் வெளியே வந்து விடும். பின் சில வாரங்களில் பறந்து போய் விடும். எங்களின் ஆயுள் காலம் ஆறு அல்லது எழு வருடங்கள்"

நான் : "நீங்கள் தேசம் விட்டு தேசம் புலம் பெயர்வதுண்டா"?

குருவி : "ஏன் இல்லை. பருவகால மாற்றம் எங்களைப் புலம் பெயர் வைக்கிறது. நீங்கள் குளிர்

காலத்தில் கனடாவிலிருந்து ப்ளோரிடா போவது போல். எங்களுக்கு பிடித்த உணவு, மண்புழுக்கள். குளிர்காலத்தில் ஜூசி புழுக்கள் மற்றும் பிற பூச்சிகள் உணவு கண்டுபிடிக்க இயலாது. அதனால் குளிர்காலத்தில் எங்கள் உணவை மாற்றிக் கொள்கிறோம். வடக்கில் வசிக்கும் பெரும்பாலான ராபின்கள் தெற்கு நோக்கி நகர்கின்றன.

நான்: “உங்களினம் புலம் பெயரும் போது எவ்வளவு வேகமாக பறக்ககிறது “?

குருவி: ” நாங்கள் புலம் பெயரும் போது மணிக்கு சுமார் 30 - 36 மைல் வேகத்தில் பறக்கிறோம் தினமும் பல மணிநேரங்களுக்கு எங்களால் பறக்க முடியும், ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 100-200 மைல்கள் வரைபறப்போம்” .

நான்:” உங்கள் இனத்தின் குடிபெயர்வு எவ்வளவு தூரம்?

குருவி : “சில ரொபின்கள் ஆயிரம் மைல்கள் பறக்கின்றன, வன்கூவர் தீவிலிருந்து குவாதமாலா வரை தெற்குப் பகுதிக்கு குடிபெயரும் ரொபின்களும் உண்டு”

நான் : ” ரொபின்கள் இரவிலா அல்லது பகலிலா புலம் பெயரும்”?

குருவி: “ரொபின் எப்போதாவது இரவில் குடிபெயர்ந்தாலும், பகல் நேரங்களில் பெரும்பாலும் குடிபெயர்கின்றன.

நான் : “புயல்கள் வீசும்போது ரொபின்கள் எவ்வாறு செல்கிறது”?

குருவி :  "புயல் வீசும்போதும் பனி
பெய்யும்  போதும் நாங்கள் அடர்த்தியான செடிகள்
உயர்ந்த கட்டிடங்களில் பாதுகாப்பை நாடுகிறோம்  எங்கள்  உடலில்
உள்ள அடர்த்தியான இறகுகள் எங்கள் உடலைக் குளிரில்
இருந்து பாதுகாக்கிறது. சூரியன் செல்லும் திசையை  வைத்து அதை
எமது வழிகாட்டியாகப் பாவிக்கிறோம்".

நான் :. எல்லா  ரொபின்களும் குடிபெயர்ந்து வாழ்கிறார்களா?
குருவி :. இல்லை! ரொபின்கள் இருபத்தைந்து  விகிதம் மட்டுமே
நவம்பர் வரை உயிர்வாழும் என்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.
பல அனுபவம் வாய்ந்த  ரொபின்கள் கூட குடியேறும்போது
இறந்து போகின்றறன .

நான்" "முதலில் புலம் பெயர்வது
ஆண் ரொபின்களா அல்லது பெண் ரொபினா ?
குருவி : "ஆண் ரொபின்கள் முதலில் புலம்
பெயரும்.  பெண் ரொபின்கள் முட்டையிட்டு. குஞ்சு பொரிப்பதினால்
புலம் பெயரத் தாமதமாகும்
நான் : " இடம் விட்டு
இடம் பெயர்வதுக்குத் தேவையான சக்தியைப் பெற ரொபின்கள் என்ன
சாப்பிட வேண்டும்"?

குருவி: "  குளிர்காலத்தில்
இறுதியில், ரொபின்கள் பெர்ரி நிறையச் சாப்பிடும் . அவர்கள் வசந்த
இடம்பெயர்வு ஆரம்பத்தில் பல புழுக்கள் பழங்கள் மற்றும் பூச்சிகள்,

புழுக்கள் நிறையச் சாப்பிடுவதன்

மூலம் தம்மைப் புலம் பெயரத் தயார் படுத்துகின்றன" .

நான் : ".குடிபெயரும் போது, ரொபின்கள் ஒன்றாகப் பயணம்

செய்கின்றனவா?

குருவி: "ஆம், அவர்கள் புலம்

பெயரும் போது கூட்டமாகப் பறக்கின்றன" .

நான்: ரொபின்கள் புலம் பெயரக் குறைந்தபட்ச சாதகமற்ற வானிலை

என்ன"?

குருவி: " பனி மழை மற்றும் பனி ஆகியவை மிக மோசமாக

உள்ளன.

நான்: :ரொபின்கள் ஏன் தெற்கில் தங்கவில்லை? வடக்கில் ஏன்

வடக்கில் இடம் பெயர்கிறது ?

குருவி: " ரொபின்கள் வெப்பமான பருவ நிலையை விரும்பும். மற்றும்

குளிர்காலங்களில் அடிக்கடி வெப்பமான பகுதிகளுக்குச் செல்லும்" .

நான் ஒரு மாநிலம், மாகாணம் இருந்து ரொபின்கள் குளிர்காலத்தில்

புலம்

பெயர்வதற்கான தகவல்களை விஞ்ஞானிகள் எப்படிப் பெறுகிறார்கள் ?

குருவி : விஞ்ஞானிகள் ரொபின்கள் பறவை எங்கே

செல்கின்றன என்று அறிய. அவர்கள் ரொபின்களின் கால்கள் மீது

ஆயிரக்கணக்கான தகவல் சேகரிக்கும்

கருவிகளை வைத்திருக்கிறார்கள். இந்த பறவைகள் சிலவற்றில்

பொருத்திய கருவிகளிலிருந்து பெரும் தகவல்கள் துல்லியமான

முடிவுகளை எடுப்பதற்கு உதவும் போதுமான தகவல்களைச் சேகரிக்க நீண்ட நேரம் எடுக்கும். இதற்கிடையில், ரொபின்களின் குடிபெயர்வு முறைகளில் சில மாறலாம். அதனால் மேலும் ஆராய்ச்சி மிகவும் சிக்கலானதாகிறது.

நான்: ரொபின்கள் குடிபெயரும் போது, அது சிறிய அல்லது பெரிய குழுக்களாகவோ அல்லது தனியாகவோ பயணம் செய்கிறதா?

குருவி : "ரொபின்கள் பெரும்பாலும்
கூட்டமாக இணைந்து வானில் பறக்கின்றன . ஒருமுறை
ஏறக்குறைய 5 மணி நேரத்தில்
ஏறக்குறைய 60,000 ரொபின்கள்கூட்டமாக பறந்தன ! சில
நேரங்களில் ரொபின்கள் தனியாகவும் பறக்கின்றன".

நான் : ".இலையுதிர்காலத்தில் மற்றும்
குளிர்காலத்தில் ரொபின்களுக்கு உதவ நான் என்ன செய்ய முடியும்?

குருவி :.நீங்கள் உங்கள் வீட்டுத் தொட்டத்துக்கு
வரும் ரொபின்களோடு நட்பு கொள்ளுங்கள்
அதாவது, அதிகமானஇலைகளை கழிக்க வேண்டாம். இறந்த
இலைகள், பூச்சிகள் புழுக்கள்
ஆகியவற்றை அப்படியே விட்டுவிடுங்கள் தோட்டத்தில் உள்ள
தானியக் கூடுகளை நிரப்பி வையுங்கள் . நாங்கள் கடுமையான
குளிரில் தங்க இடம் வேண்டும் அதுக்கு சியல் பறவைக் கூடுகளைத்
தோட்டத்தில் வையுங்கள்
நான் : "நீ கேட்டுக் கொண்ட பாடி நான் செய்கிறேன்., எனக்கு
உன் நேரத்தைச் செலவு செய்து நேர்காணல்

தந்ததுக்கு என் நன்றிகள். அதோ உன்

மனைவி உனக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறாள். சென்று விடு”.

ரொபின் குருவி தன் மனைவியிடம் பறந்து சென்றது.

****

(யாவும் புனைவு )